**வரையறுக்கப்பட்ட பில்டிங் மெட்டீரியல் கூட்டுத்தாபனம் - 2017**

வரையறுக்கப்பட்ட பில்டிங் மெட்டீரியல் கூட்டுத்தாபனக் கம்பனியின் (“கம்பனி”) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 150(1) பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 2022 ஏப்ரல் 29 ஆந் திகதி 9/17 ஆந் தொகுதியின் கீழ் 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலுமான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையொன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதற்கு மேலதிகமாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கிணங்க கணக்காய்வு நடத்தலை அடிப்படையாகக் கொண்டு இந்த நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். மறுப்பு அபிப்பிராய பந்திக்கான அடிப்படையில் விபரிக்கப்பட்ட விடங்களினால், கணக்கு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவு பொருத்தமான கணக்காய்வு சான்றினை பெறமுடியாதுள்ளேன்.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று அல்லது விரிவான பட்டோலையொன்று கம்பனியிடம் காணப்படாத காரணத்தால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்றில் காணப்படும் ரூபா 30.17 மில்லியனான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் பெறுமானத் தேய்வுப் பெறுமதியான ரூபா 1.41 மில்லியன் ஆகியவற்றின் முழுமைத் தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) கம்பனிக்கு சொந்தமான 21 காணித் துண்டுகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் எடுப்பதற்கு மீளாய்வாண்டினுள்ளும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு கொள்கைகளின் கீழான குறிப்பு இலக்கம் 2.3 தனியுரிமையுடைய காணிகளுக்காக பெறுமானத் தேய்வு ஒதுக்கீடு செய்யப்படுவதாக தவறுதலாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்காக கம்பனியால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த தேறிய நட்டம் ரூபா 86.60 மில்லியனாக காணப்பட்டதுடன், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான திரண்ட நட்டம் ரூபா 691.77 மில்லியனாக காணப்பட்டது. அவ்வாறே, அத்திகதியில் கம்பனியின் நடைமுறைச் சொத்துக்களை விஞ்சிய நடைமுறைப் பொறுப்புகள் ரூபா 268.46 மில்லியனாக (113 சதவீதம்) மற்றும் கம்பனியின் மொத்த சொத்துக்களை விஞ்சிய மொத்த பொறுப்புகள் ரூபா 694.90 மில்லியனாக (260 சதவீதமாக) காணப்பட்டது. மேலும், கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கமைய கடன் உரிய முறையில் மீள செலுத்தப்படாத காரணத்தால் கடனுக்காக பிணை வைக்கப்படும் கம்பனியின் ஆதனங்களை சட்டரீதியாக சுவீகரிப்பதற்காக பல்வேறு தரப்பினரால் உரித்து கோரப்பட்டிருந்த போதிலும், 03 கடன் கொடுத்தோரால் கம்பனிக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது. இந்த விடயங்களின் அடிப்படையில் கம்பனியின் தொடர்ச்சியான நிலவுகை தொடர்பில் பொருண்மையான நிச்சயமற்ற நிலையொன்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

எவ்வாறான போதிலும், கம்பனியால் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 220 ஆம் பிரிவிற்கமைய கம்பனியின் பங்குடமையாளர்களின் அதிவிசேட பொதுச் சபை கூட்டமொன்றை கூட்டி கம்பனிக்கு மேற்கொள்ள நேர்ந்துள்ள நட்டங்களின் தன்மை மற்றும் அளவு மற்றும் நட்டங்களுக்கான காரணம், அவ்வாறான நட்டங்கள் ஏற்படுவதை தடுப்பதற்கு அல்லது நட்டங்களை தீர்ப்பதற்கு பணிப்பாளர் சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் அந்த நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடி பணிப்பாளர் சபையால் தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்றை பங்குதாரர்களுக்கு அனுப்பிவைக்க வேண்டிய போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை.

(ஈ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம், விற்பனைக்கான இருப்பு பெறுமதி ரூபா 68.88 மில்லியனான போதிலும், இருப்பு மெய்மையாய்வு அறிக்கைகள், இருப்பு பேரேடொன்று இல்லாதிருந்த காரணத்தால் அந்த இருப்புகளின் சரியான தன்மை மற்றும் அத்திகதியில் உள்ளபடியான பௌதீக உள்ளதன்மை ஆகியவற்றை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(உ) நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பெற வேண்டிய முற்பணங்களிடைய 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தினுள் ரூபா 3.34 மில்லியனான நானாவித முற்பண மீதிகளின் சரியானதன்மை மற்றும் அறவீட்டின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முற்பணப் பதிவேடுகள் மற்றும் உரிய அடிப்படை சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஊ) கம்பனியின் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை அல்லாத பொறுப்புகளின் கீழ் 08 அரச நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கடன் மற்றும் முற்பணங்கள் ரூபா 431.3 மில்லியன் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த கடனை பெற்றுக்கொள்ள உரிய விதிகள் மற்றும் நிபந்தனைகளை மீளாய்வு செய்வதற்காக உரிய கடன் உடன்படிக்கை அல்லது

ஏனைய உப ஆவணங்கள், விபரங்கள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இந்த கடன் தொகைகளில் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கடன் தொகை ரூபா 40.86 மில்லியனாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களை பரிசோதனை செய்யும் போது கம்பனியால் பிணை வைக்கப்பட்ட காணியானது கடன் தொகை செலுத்தப்படாத காரணத்தால் அந்த கூட்டுத்தாபனத்தால் சுவீகரிக்கப்பட்டு முதலீட்டு சொத்தொன்றாக கணக்கு வைக்கப்பட்டிருந்ததாக கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. மேலும், கணக்காய்வு உறுதிப்படுத்தல்களின் அடிப்படையில் ரூபா 7.5 மில்லியனான வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கடன் தொகை அந்த அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிராததுடன், வீடமைப்பு அமைச்சிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதாக காண்பிக்கப்படும் ரூபா 51.40 மில்லியனான கடன் தொகை தொடர்பில் எந்த தகவலும் கம்பனியிலிருந்து அல்லது அந்த அமைச்சிலிருந்து பெற்றுக்கொள்ள முடியாது.

(எ) 2007 செப்தம்பர் 27 ஆந் திகதிய அமப/07/1625/342/021 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கொழும்பு 12, ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ள கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு உரிய காணியொன்றில் 100 பேர்ச்களை கொண்ட காணித் துண்டொன்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சாட்டுவதற்கு ரூபா 50 மில்லியனான முற்பணத் தொகையொன்று 2008 பெப்ரவரி 22 ஆந் திகதி கம்பனியால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், 2012 மே 07 ஆந் திகதிய 12/0446/540/005 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானமொன்றின் ஊடாக மேற்படி அமைச்சரவை தீர்மானம் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன், பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணத் தொகை மீள செலுத்தப்பட வேண்டியதாக அவதானிக்கப்பட்டது. நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை அல்லாத பொறுப்புகளின் கீழ் இந்த செலுத்த வேண்டிய முற்பணத் தொகை காண்பிக்கப்பட்ட போதிலும், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பின் ஊடாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அவ்வாறானதொரு கடப்பாடு இல்லை என குறிப்பிடப்பட்டது.

(ஏ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்றின் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புகளின கீழ் முறையே 04 வங்கிக் கணக்கு மீதிகள் ரூபா 6.54 மில்லியன் மற்றும் 08 வங்கிக் கணக்குகளின் வங்கி மேலதிகப்பற்று மீதிகளுக்கு உரிய ரூபா 161.81 மில்லியன் காட்டப்பட்டிருந்தன. எனினும் வங்கி உறுதிப்படுத்தல்கள் பரீட்சிக்கப்பட்டபோது 05 வங்கிக் கணக்குகளில் ரூபா 1.55 மில்லியனாகவும் 03 வங்கிக் கணக்குகளுக்கான மேலதிகப்பற்று மீதிகள் ரூபா 23.01 மில்லியனாகவும் காணப்பட்டது. 04 வங்கிக் கணக்குகளுக்கு உரிய வங்கி உறுதிப்படுத்தல்கள் அல்லது வங்கிக் கூற்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இதற்கமைய நிதி நிலைமைக் கூற்றின் வங்கி மீதி மற்றும் வங்கி மேலதிகப்பற்று மீதி முறையே ரூபா 4.99 மில்லியன் மற்றும் 138.80 மில்லியன் வங்கி உறுதிப்படுத்தல்கள் மூலம் உறுதிப்படுத்தப்படவில்லை. மேலும், சமர்ப்பிக்கப்பட்ட 08 வங்கிக் கணக்குகளுக்கு உரிய வங்கி உறுதிப்படுத்தல்கள் மற்றும் நிதி நிலைமைக் கூற்றில் உள்ள காசு மீதி ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடு ரூபா 15.88 மில்லியனாக காணப்பட்டது.

(ஐ) 2019 ஆம் ஆண்டின் போது கணினிக் கட்டமைப்பின் தரவுகளில் சேதம் ஏற்பட்டதாகவும், இதன் காரணமாக காசுப் புத்தகத்தின் தொடக்க மற்றும் இறுதி நிலுவைகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியவில்லை என்றும், இதன் காரணமாக காசுப் புத்தகத்தின் மீதிகளை உறுதிப்படுத்த முடியவில்லை என்றும் நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும், 12 வங்கிக் கணக்குகள் தொடர்பில் மாதாந்திர வங்கி இணக்கக்கூற்றுகள் தயாரிக்கப்படவில்லை. இதன் காரணமாக, வங்கி மற்றும் காசுக் கொடுக்கல் வாங்கல்களின் இடையே காணப்பட்ட வேறுபாடுகள் மற்றும் அதற்கு காரணமாக அமைந்த விடயங்கள் தொடர்பில் கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஒ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்றின் ஆண்டுக்கான இலாபம் விரிவான வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிராததுடன், முன்னைய வருட சீராக்கங்களான ரூபா 36.13 மில்லியன் சீராக்கப்பட்டிருந்தது. அதன்னால் ரூபா 20.76 மில்லியனான மிகையூதிய ஒதுக்கீடு ஏற்பட்டதுடன், எஞ்சிய ரூபா 15.88 மில்லியன் 08 வங்கிக் கணக்குகளுக்கு உரிய காசு புத்தகத்தின் மீதி மற்றும் வங்கி இணக்கக்கூற்று ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகளின் கூட்டுத்தொகை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஓ) 2017 ஆம் ஆண்டுக்கான ரூபா 10.36 மில்லியனும் உள்ளடங்களாக 2017 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 74.93 மில்லியன் கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய தேசத்தை கட்டியெழுப்பும் வரி, வியாபாரப் புரள்வு வரி, பெறுமதி சேர் வரி, மற்றும் பொருளாதார சேவைக் கட்டணங்கள் ஆகியவற்றை செலுத்துவதற்கு ஆண்டினுள்ளேயும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பெற வேண்டிய பெறுமதி சேர் வரி ரூபா 30 மில்லியனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பெறுமதி சேர் வரி என்பவற்றின் விரிவான பட்டோலைகள், வரி அறிக்கைகள், வரி கணிப்பீடுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் அவற்றின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஔ) மூலதனத்தின் (Equity) கீழ் மட்டுப்படுத்தப்பட்ட ஒதுக்கங்களாக (Restricted Reserve) ரூபா 16.11 மில்லியன் வரவு மீதியொன்று நிதி நிலைமைக் கூற்றில் தொடர்ச்சியாக முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், இந்த மீதியின் சரியானதன்மை, முழுமைத்தன்மை மற்றும் உள்ளதன்மையை உறுதிப்படுத்த தேவையான விபரங்கள் உள்ளடங்களிய மூல ஆவணங்கள், பட்டோலைகள், உரிய அங்கீகாரங்கள் போன்ற போதிய சான்றுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(க) கிரம வரிசையில் விற்பனை விலைப்பட்டியல்களை ஆய்வு செய்யும் போது 33 விலைப்பட்டியல்கள் காணாமல் போனதால், நிதிநிலை அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள ரூபா.816.27 மில்லியன் விற்பனை வருவாயின் முழுமை மற்றும் துல்லியத்தை கண்டறிய முடியவில்லை.

(கா) கடன் கொடுத்தோர் பேரேட்டில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டிருந்த ரூபா 8.29 மில்லியனான சீமெந்துக் கொள்வனவுகளுக்குரிய கடன் கொடுத்தோரின் பெயர் அல்லது இனங்காணும் குறியீடு குறிப்பிடப்பட்டிராத காரணத்தால், அந்த பொறுப்புகளுக்கான கடன் கொடுத்தோரை இனங்காண முடியாதிருந்தது. கொள்வனவுக் கட்டளையில் கடன் கொடுத்தோரின் பெயர் உள்ளடக்கப்பட்டிராததுடன், கடன் கொடுத்தோரை இனங்காண உரிய ஏனைய தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(கி) நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 156.48 மில்லியனான வியாபார கடன் கொடுத்தோர் மீதிகள் மற்றும் ரூபா 79.11 மில்லியனான வியாபார கடன் பட்டோர் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு மற்றும் கடன் கொடுத்தோர் மற்றும் கடன் பட்டோர் காலப் பகுப்பாய்வும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதன் காரணமாக அந்த மீதிகளின் சரியானதன்மை, முழுமைத்தன்மை மற்றும் உள்ளதன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. மேலும், வியாபார கடன் கொடுத்தோரின் பெறுமதி ரூபா 156.48 மில்லியனாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், பேரேடுகளின் பிரகாரம் அந்த மீதி ரூபா 156.89 மில்லியனானமையால் ரூபா 0.41 மில்லியனான வேறுபாட்டுக்கான காரணங்களும் கணக்காய்வுக்கு முன்வைக்கப்படவில்லை

(கீ) நிதிக்கூற்றுக்களில் காணப்படும் பெறுமதி ரூபா 36.37 மில்லியனான வங்கிப் பிணைமுறிகளிடையே ரூபா 24.37 மில்லியன் பெறுமதியான வங்கிப் பிணைமுறிகளுக்காக மீதி உறுதிப்படுத்தல்கள் முன்வைக்கப்படவில்லை.

(கு) மாதிரி கணக்காய்வுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்டவாறு ரூபா 9.68 மில்லியன் பெறுமதியான 06 கொள்வனவு வவுச்சர்களின் பெறுமதியானது கொள்வனவுக் கணக்கில் உள்ளடக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக, விரிவான வருமான அறிக்கையில் விற்பனைச் செலவில் சேர்த்து ரூபா 744.83 மில்லியன் தொகையான கொள்முதல் விலையின் துல்லியத்தை உறுதிப்படுத்த முடியவில்லை. மேலும், கொள்முதல் தொடர்பான கொள்முதல் தகவல் அடங்கிய கோவைகளும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(கூ) கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளை பரிசோதித்த போது, மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டு தொடர்பான கொடுப்பனவுகள் தொடர்பான ரூபா 22.42 மில்லியன் பெறுமதியான 126 உறுதிச்சீட்டுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை, எனவே அந்த கொடுப்பனவுகளின் துல்லியம், பொருத்தம், முழுமை ஆகியவற்றை சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(கெ) 2022 ஆம் ஆண்டு இரண்டு தனியார் நிறுவனங்களின் தலைவர்களால் நிலுவையில் உள்ள கடனைத் திருப்பிச் செலுத்துமாறு தெரிவித்து சமர்ப்பித்த கடிதங்களின்படி, 2017 டிசம்பர் 31 ஆந் திகதி அந்த நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய நிலுவை ரூபா.43.40 மில்லியன் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பேரேட்டின் படி, கடன் கொடுத்தோர் மீதிகள் ரூபா 16.96 மில்லியன் மாத்திரம் ஆக காணப்பட்டது. இதன்படி, கடன் விசாரணைக் கடிதங்களுக்கும், பேரேட்டில் உள்ள கடனாளியின் மீதிக்கும் இடையே உள்ள வித்தியாசம் ரூபா.26.44 மில்லியன் ஆக காணப்பட்ட போதிலும், வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(கே) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மக்கள் வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகையான ரூபா 136.54 மில்லியனுக்காக மீளாய்வாண்டிற்கு உரியதாக செலுத்த வேண்டிய வட்டி விரிவான வருமானக் கூற்றில் ரூபா 1.12 மில்லியன் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஆண்டிற்கான நட்டம் அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(கை) கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திலிருந்து 2013 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 75 மில்லியனான கடன் மீதிக்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிலுவை வட்டியான ரூபா 25.82 மில்லியன் மீளாய்வாண்டினுள்ளேயும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கொ) நிதி நிலைமை கூற்றில் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் கீழ் மிகைக் கட்டணமாக உள்ளடக்கப்பட்டுள்ள நட்டஈட்டுக் கொடுப்பனவுகளுக்காக அரச மானியப் பெறுவனவு ரூபா 38.29 மில்லியன் 2012 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்து காலக்கழிவு ஏற்பாடு செய்யாது கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்டவாறு காணப்பட்டது. அந்த பணத்தை பயன்படுத்தி நட்டஈடு செலுத்தப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்கு உரிய சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

மேற்குறிப்பிடப்பட்டதிற்கேற்ப, என்னால் நிதிக்கூற்றுக்களிலுள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணம், வியாபார மற்றும் ஏனைய வருமதிகள், கடன் தொகை மற்றும் தற்காலிக கடன் தொகை, வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை,(கொள்வனவு,விற்பனை) செலுத்த வேண்டிய வருமான வரி, நிதிக்கிரயம், தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள், வெளிப்படுத்தல்கள் போன்றவற்றை சரிபார்க்க முடிந்திருக்கவில்லை. அத்தகைய விடயங்களின் விளைவால், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலைமைக்கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று மற்றும் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று தொடர்பில் ஏதும் திருத்தங்கள் அவசியமானதா என்பதை தீர்மானிப்பதற்கு இயலாதிருந்தது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தால் கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்கு போதியதுமான பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை பெற்றுக்கொள்ள முடியாத நிலையிலிருந்தேன். அதற்கிணங்க, நான் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை.

### 2.2 ஏனைய சட்ட ரீதியான மற்றும் வருமான ரீதியான தேவைப்பாடுகள்

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் வேண்டப்பட்டவாறு நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) இந்த அறிக்கையின் அபிப்பிராணத்திற்கான அடிப்படைப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயமொன்றை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ள என்னால் முடியாதிருந்தது. அதன் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் நான் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மை

கணக்காய்வின் போது பின்வரு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணக்கமின்மை |
|---|---|---|
| **(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை** | | |
| (i) | 5.1.3 ஆம் பந்தி | பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் மற்றும் வருடாந்த பாதீடுகள் ஆகியவற்றின் பிரதிகள் அதற்கடுத்த வருடம் ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ii) | 6.5.1 ஆம் பந்தி | கணக்காண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் வருடாந்தி நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தினால் பயன்படுத்தப்படும் கணினி சேவர் இயந்திரம் 2019 செப்தம்பர் மாதத்தின் போது வைரஸ் தாக்கம் காரணமாக செயலிழந்தமையும், அந்த சந்தர்ப்பத்தில் வைரஸ் பாதுகாப்பு செயலிகளை (Firewalls) நிறுவியிராமையால் மற்றும் பின்னூட்டல் (Backups) வைத்திருக்காமை போன்ற காரணங்களால் |

கணக்குகளை தயாரிப்பதற்கு தேவையான தகவல்கள் அழிவடைந்துள்ள காரணத்தால் 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான நிதிக்கூற்றுக்களை தயாரிக்க முடியாதென BMC/IN/NAO/2022/AQ/01 ஆம் இலக்க கணக்காய்வு ஐயவினாவிற்கு 2022 பெப்ரவரி 09 ஆந் திகதிய தலைவரின் பதில் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், கணினிக் கட்டமைப்பின் கட்டுப்பாட்டு முறைமையை நடைமுறைப்படுத்தாமை தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரை இனங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும், 2022 ஏப்ரல் 19 ஆந் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் குழுவின் கட்டளையின் அடிப்படையில் இது தொடர்பில் 2022 ஏப்ரல் 28 ஆந் திகதி குற்றப் புலனாய்வு திணைக்களத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பில் இதுவரை தகவல் வெளிப்படுத்தப்படாததுடன், 2017 ஆம் ஆண்டுக்கரிய நிதிக்கூற்றுக்கள் 4 வருடங்களுக்கு மேற்பட்ட கால தாமதத்தின் பின்னர் 2022 ஆகஸ்ட் 08 ஆந் திகதி கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயற்பாடுகளின் பெறுபேறானது ரூபா 89,600,540 ஆன நட்டமாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் நட்டம் ரூபா 94,711,011 ஆனமையால், மீளாய்வாண்டுக்கான நட்டத்தில் ரூபா 5,110,471(5%) ஆன குறைவொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டுக்காக நிதி விளைவுகளில் இந்த நட்டம் குறைவடைந்தமைக்கு நிர்வாகச் செலவினம், பகிர்ந்தளிப்புச் செலவினம் மற்றும் நிதி மற்றும் ஏனைய செலவினங்களின் ரூபா 49,250,123 அதிகரித்திருந்த போதிலும், வருமானம் ரூபா 99,674,341 இனால் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 பெறுகை முகாமைத்துவம்

நிதிப் பெறுபேறுகளில் காணப்படும் ரூபா 744,834,762 ஆன கொள்வனவுகளுக்காக 2006 இன் பெறுகை வழிகாட்டிக் கோவை பின்பற்றப்பட்டிராததுடன், பதிவு செய்த வழங்குநர்களிலிருந்து வெளியே வேறு வழங்குநர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

### 4.2 வாகன கட்டமைப்பின் முகாமைத்துவம்

கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கமைய அமைச்சிற்கு சொந்தமான 05 வாகனங்கள் கம்பனியால் பல வருடங்களாக பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், அந்த வாகனங்களின் உரித்தினை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பீஈடீ/12 ஆம் இலக்கத்தின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம், 2015 ஆம் ஆண்டு முதல் ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.